(பதிப்புரிமையுடையது)

உ
சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு
அகில இலங்கை
8 சைவசமய பாடப்பரீட்சை : 2021
தரம் எட்டு



nselva.com

கால அளவு	1.30 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. (அ)மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. ஆலயம் என்பதில் 'ஆ' என்பது எதைக் குறிக்கின்றது?
   1) பதி 2) பசு 3) பாசம் 4) மாயை
2. கோயில்களில் பிரபஞ்ச இயக்கத்தை விளக்க அமைந்திருப்பது எது?
   1) கோபுரம் 2) சிற்பங்கள் 3) மூலமூர்த்தி 4) தளங்கள்
3. பெரிய கோவில்களில் நித்திய கிரியை எத்தனை வேளை இடம்பெறும்?
   1) 1 2) 3 3) 6 4) 12
4. ஆணவம் கொண்டவர்கள் இறைவனை அறிய முடியாது என்பதை விளக்கும் விரதம் எது?
   1) நவராத்திரி 2) சிவராத்திரி 3) தைப்பூசம் 4) கார்த்திகை விரதம்
5. நாள் மங்கலம் என்றால் என்ன?
   1) கிரகப் பிரவேசம் 2) திருமண நாள்
   3) பிறந்தநாள் 4) ஏடு தொடங்குதல்
6. கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் திருத்தலம் எது?
   1) சீர்காழி 2) திருவையாறு 3) திருமறைக்காடு 4) சிதம்பரம்
7. கைவிசேடம் பெறுதல் என்ற நிகழ்வோடு தொடர்புடைய பண்டிகை எது?
   1) புத்தாண்டு 2) தீபாவளி 3) பொங்கல் 4) ஆடிப்பிறப்பு
8. "காப்பதோர் வில்லும் அம்பும்" என்ற பாடலில் அப்பர் எந் நாயனாரை வியந்து பாடியுள்ளார்?
   1) அப்பூதி அடிகள் 2) சம்பந்தர் 3) கண்ணப்பர் 4) சுந்தரர்
9. பண்ணின் நேர் மொழியாள்.... என்ற பதிகம் பாடப்பட்டதன் நோக்கம் யாது?
   1) திருமறைக் காட்டின் ஆலயக்கதவு திறக்க சம்பந்தர் பாடியது.
   2) திருமறைக் காட்டின் ஆலயக்கதவு மூட அப்பர் பாடியது.
   3) திருமறைக் காட்டின் ஆலயக்கதவு மூட சம்பந்தர் பாடியது.
   4) திருமறைக் காட்டின் ஆலயக்கதவு திறக்க அப்பர் பாடியது.
10. சிவன் இமய மலைக்குச் சென்று பார்வதியைத் திருமணம் செய்து கொண்ட நாள் எது?
    1) வைகாசி விசாகம் 2) பங்குனி உத்தரம்
    3) ஆனி உத்தரம் 4) மார்கழி திருவாதிரை

11. இராமனுக்கு பிரம்மஹத்தி தோசம் ஏற்படக்காரணம் யாது?
1) சீதையைப் பிரிந்தமை 2) இராவணனைக் கொன்றமை
3) வாலியைக் கொன்றமை 4) சூர்ப்பனகையின் சாபம்

12. ஏனைய கோயில்களில் இல்லாத பெரிய உடுக்கு வாத்தியம் உள்ள ஆலயம் எது?
1) காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்
2) உடப்பு திரௌபதை அம்மன் கோவில்
3) உகந்தை முருகன் ஆலயம்
4) கதிர்காமம் முருகன் ஆலயம்

13. உடப்பு ஸ்ரீ திரௌபதை ஆலயத்தில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் சிறப்பு நிகழ்வாகக் கருதப்படுவது எது?
1) மகாபாரதம் தொடர்பான சம்பவங்களை நடித்துக்காட்டல்.
2) தீமித்தல் கண்ணகி வழக்குரைகதை படிதல்.
3) இராமயணம் தொடர்பான சம்பவங்களை நடித்துக்காட்டல்.
4) கப்புக்கள் யாரால் நடைபெறும் குளுத்திச் சடங்கு.

14. ஏழுசுனைகளாகக் காணப்படும் தீர்த்தத்தில் சரவணப் பொய்கை, பாபநாசக்சுனை என்பவற்றைக் கொண்ட ஆலயம் எது?
1) வெருகல் கந்தசாமி கோவில் 2) செல்லக் கதிர்காம ஆலயம்
2) உகந்தை முருகன் ஆலயம் 4) மண்டூர் முருகன் ஆலயம்

15. மாயவன் அருளிய சக்கரத்தை வல்லிபுரத்துக்குக் கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டவர் யார்?
1) மாருதப்புரவீகவல்லி 2) ஸ்ரீதேவி 3) பூமாதேவி 4) இலவல்லி

16. வேதங்களின் சாரமாக விளங்குவது எது?
1) ஆரணியம் 2) உபநிடதம்
3) சங்கிதை 4) பிராமணங்கள்

17. "வான் அளக் கண் மடவாள்" எனச் சுந்தரர் யாரைக் குறிப்பிடுகின்றார்?
1) சங்கிலியார் 2) பரவையார் 3) மாதுமை 4) கேதாரகௌரி

18. திருமுறைகளைத் தொகுப்பித்தவர் யார்?
1) இராஜ இராஜ சோழன் 2) நம்பியாண்டார் நம்பி
3) சேக்கிழார் 4) தில்லை வாழ் அந்தணர்கள்

19. பின்வரும் திருப்பாடல்களில் இறைவன் நஞ்சுண்ட கதையைக் கூறாத பாடல் எது?
1) வேயுறு தோளி பங்கன் 2) இடரினும் தளரினும்
3) சொற்றுணை வேதியன் 4) ஆலந்தானுகத்து

20. சம்பந்தர் "காரைகள் கூகைமுல்லை"என்ற பதிகத்தைப் பாடியதால் ஏற்பட்ட அற்புதம் யாது?
1) முல்லை நிலம் நெய்தல் நிலமாகியது.
2) நெய்தல் நிலம் முல்லை நிலமாகியது.
3) பாலை நிலம் நெய்தல் நிலமாகியது.
4) நெய்தல் நிலம் மருத நிலமாகியது.

21. "என் கடன் பணி செய்து கிடப்பதே"என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்த நாயனார் யார்?
1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

22. திருவாசகம் மாணிக்க வாசகர் சொல்ல யாரால் எழுதப்பட்டது?
1) அரிமர்த்தன பாண்டியனால் 2) சேக்கிழாரால்
3) நம்பியாண்டார் நம்பியால் 4) இறைவனால்

23. ஔவையின் "ஈவது விலக்கேல்" என்ற மகாவாக்கியம் இடம்பெறும் நூல் எது?
    1) நல்வழி 2) மூதுரை
    3) கொன்றைவேந்தன் 4) ஆத்திசூடி
24. அறிவித்தால் அறியும் பொருள் எது?
    1) இறைவன் 2) உயிர் 3) தேவர் 4) ஆணவம்
25. தோத்திரநூலாகவும், சாத்திரநூலாகவும் போற்றப்படும் நூல் எது?
    1) பெரிய புராணம் 2) திருப்புகழ் 3) திருமந்திரம் 4) திருப்பல்லாண்டு

(25 புள்ளிகள்**)**

(ஆ) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஸ்ரீ பஞ்சாஷர செபஞ் செய்வதற்கு யோக்கியோர் யாவர்?

   .....

2. தமிழ் வேதத்தை எப்படி ஒதுதல் வேண்டும்?

   .....

3. கிரியைகளின் போது எதற்காகப் பவித்தரமணியப்படுகிறது?

   .....

4. அபிராமிபட்டரின் பிராத்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் எத்தினம் பூரணை தினமாகக் காட்சியளித்தது?

   .....

5. மாசிகங்களின் 4 வகையையும் குறிப்பிடுக?

   .....

6. மூன்று தரம் கைக்கொட்டி வணங்கும் தெய்வம் யார்?

   .....

7. சிவராத்திரி எத்தனை வகைப்படும்?

   .....

8. உகந்தை மலையின் திருத்தளத்தில் பிரசாதமாக வழங்கப்படுவது எது?

   .....

9. ''மண்ணின் நல்லவண்ணம்..." எனும் பதிகம் எத்திருத்தலத்தின் மீது பாடப்பட்டது?

   .....

10. மருத்து நீர் யாரால் தயாரிக்கப்படுகிறது?

    .....

11. திண்ணனாருடன் கன்னி வேட்கைக்குச் சென்ற இருவர் பெயர்களைத் தருக?

    .....

12. திருசெங்காட் குடியில் எந்த நாயானார் வாழ்ந்த பதியில் அப்பர் தங்கியிருந்தார்?

    .....

13. விரதத்தினை முடித்து வைக்கும் போது அடியார்களுடன் உணவு உண்ணுதல் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

14. வைகாசி விசாகம் எவ்விரு மதத்தினருக்கும் பொதுவாக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது?

.....

15. தலவிருட்சத்தின் பயன் ஒன்று தருக?

.....

(15 புள்ளிகள்**)**

பகுதி - II

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. பின்வரும் தொடக்கத்தையுடைய திருப்பாடல்களுள் இரண்டினைப் பிழையின்றி எழுதுக. பாடியவரின் பெயர், பாடப்பட்ட தலம் என்பனவற்றையும் எழுதுக.

1. "பெருகலாம் தவம் ....."
2. நீள நினைந்தடி ....."
3. "பாரொடு விண்ணாய் ....."
4. "மண்ணில் நல்ல ....."

(2x7 = 14 புள்ளிகள்**)**

2. பின்வரும் தொடக்கத்தையுடைய குறட்பாக்களை எழுதுக.

1. "பணிவுடையன் இன்சொலன் ....."
2. "செய்யாமல் செய்த ....."
3. "நன்றே தரினும் ....."
4. "காக்க பொருளா ....."
5. "மறப்பினும் ஒத்துக் ....."
6. "விளிந்தாரின் வேறல்லர் ....."

(6x1 = 6 புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. 1. முன்னேஸ்வர ஆலயத்தில் வருடந்தோறும் எத்தனை மகோற்சவங்கள் நடைபெறும்?

2. முன்னேஸ்வர ஆலயத்தின் மகோற்சவக் காலத்தில் நடைபெறும் சிறப்புக்கள் இரண்டு தருக?

3. முன்னேஸ்வர ஆலயத்தின் இறைவன், இறைவி பெயர்களைத் தருக?

(10 புள்ளிகள்**)**

1. கண்ணகி அம்மன் வழிபாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்திய மன்னன் யார்?
2. கண்ணகி வழிபாட்டின் மூலம் கிடைக்கும் பேறுகள் இரண்டு தருக?
3. முருகன் சூரன்போர் நிகழ்த்திய இடம் எது?

(10 புள்ளிகள்**)**

2. 1. தனியடியார்களினதும், தொகையடியார்களின் தொகை யாது?

2. திருத்தொண்டர் தொகையை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட நூல் எது? அதனைப் பாடியவர் யார்?

3. வேதாகம வரிசையைத் தொடர்ந்து தோன்றிய நூல் எவ்வாறு அழைக்கப்பட்டது?

(10 புள்ளிகள்**)**

3. 1. பதிணென் புராணங்களில் சிவபுராணங்களின் எண்ணிக்கை யாது?

2. சிவன் செய்த அற்புதங்கள் இரண்டு தருக?

3. புராணம் என்றால் என்ன?

(10 புள்ளிகள்**)**

4. 1. ஐம்பொறிகள் எவை? ஐம்பொறிகளைக் கட்டுப்படுதக் கூடிய வழிகள் இரண்டு தருக?

2. கொடையால் உயர்ந்து நின்ற காவிய நாயகர்கள் மூவரைப் பெயரிடுக?

3. மனிதனுக்கு இருக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் மூன்று தருக?

(10 புள்ளிகள்**)**

5. 1. சூக்கும வடிவான சிவமந்திரம் எது?

2. அம்மந்திரத்தை உச்சரிப்பதன் பயன் யாது?

3. இறைவனால் "அம்மையே" என அழைக்கப்பட்டவர் யார்? இவ் அம்மையார் இறைவனைக் காண எவ்வாறு பயணித்தார்?

(10 புள்ளிகள்**)**

6. பின்வருவனவற்றுள் ஏதேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பினை எழுதுக.

1. கண்ணப்ப நாயனார்
2. நாட்டார் வழிபாடு
3. விரதங்களின் மகிமை
4. ஈழத்து சிவன் ஆலயங்கள்
5. விழுமியப் பண்புகள்

(10 புள்ளிகள்**)**